டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண் ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 22.02.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 202 - Madurai | Online Edition

# சரஸ் ஆஜீவிகா மேளா கைவினைப்பொருட்களின் கண்காட்சி

புது தில்லி, பிப்.21

குருகிராமில், சரஸ் ஆஜீவிகா மேளா எனப்படும் கைவினைப் பொருட்களின் கண்காட்சி 2026 பிப்ரவரி 10 முதல் 26 வரை நடைபெற்று வருகிறது. இந்த கண்காட்சிக்குச் சென்றால் நாடு முழுவதும் பயணம் மேற்கொள்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

இந்த நிகழ்வு 28 மாநிலங்களைச் சேர்ந்த 900க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோரை ஒன்றிணைத்துள்ளது. அவர்களது சுய உதவிக் குழுக்களின் பொருட்கள் இதில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாநில அரங்குகள் 450-க்கும் அதிகமாக உள்ள இந்த விழாவில், உள்ளூர் மரபுகள், கைவினைத் திறன்களுடன் கூடிய தயாரிப்புகள் இடம் பெற்றுள்ளன. இது 'மினி இந்தியா' என்று பார்வையாளர்களால் விவரிக்கப்படுகிறது.

பார்வையாளர்கள் காஷ்மீரின் பஷ்மினா சால்வைகள், தமிழ்நாட்டின் பட்டு ஜவுளிகள், ராஜஸ்தானின் எம்பிராய்டரி செய்யப்பட்ட ரகங்கள், அசாமின் மூங்கில் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றைக் கண்டு வியக்கின்றனர். இவற்றுடன் பிராந்திய உணவுகள், கைவினைப்பொருட்கள், கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

கைவினைப்பொருட்கள், ஜவுளிகளின் காட்சி கவர்ச்சியைத் தாண்டி, சமூக-பொருளாதார மாற்றத்தை இந்த விழா ஏற்படுத்து கிறது.

சரஸ் ஆஜீவிகா மேளாவின் ஒவ்வொரு அரங்கிலும் உழைப்பை அங்கீகரிக்க இடம் உருவாக்கப்பட்டுள்ளது.

# தேங்காயில் காணப்படும் காண்டாமிருக வண்டு கட்டுப்பாட்டிற்கான நாப்தலின் உருண்டைகள் செய்முறை விளக்கம்



மதுரை, பிப்.21

மெலசிந்தலச்சேரி பகுதியில் தேங்காய் பயிரில் அதிக சேதம் விளைவிக்கும் காண்டாமிருக வண்டு தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் செய்முறை விளக்கப் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த பயிற்சியை அந்தக் கல்லூரியின் மாணவி பிரீதிகா நடத்தினார். இந்த நிகழ்ச்சியின் போது, விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டு தாக்கத்தின் அறிகுறிகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

குறிப்பாக இளம் இலைகளில் V-வடிவ வெட்டுகள் தோன்றுதல், குருத்துப் பகுதியில் துளைகள் ஏற்படுதல், மத்திய மொட்டுத் தண்டு சேதமடைதல், மர வளர்ச்சி மந்தமாகுதல், காண்டாமிருக வண்டை ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த நாப்தலின் உருண்டைகள் பயன்படுத்துவது, பயனுள்ளதாக இருப்பதை செய்முறை விளக்கமாக எடுத்துரைத்தார்.

**நாப்தலின் உருண்டைகள் பயன்படுத்தும் முறை**

ஒரு மரத்திற்கு 3-5 நாப்தலின் உருண்டைகள் பயன்படுத்தலாம். மரத்தின் குருத்துப் பகுதியில் வைக்க வேண்டும். மழைக் காலங்களில் 30-45 நாட்களுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# சித்தாளந்தூரில் மஞ்சள் ஒட்டும் வலை பயன்பாடு வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செயல்முறை விளக்கம்




நாமக்கல், பிப்.21

நாமக்கல் மாவட்டம், சித்தாளந்தூரில் உள்ள விவசாயி வயலில், சுற்றுச் சூழல் நட்பு பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் மஞ்சள் ஒட்டும் வலை (Yellow Sticky Trap) பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பி.ஜி.பி வேளாண்மை கல்லூரி மாணவர்கள் நேரடியாக வயலில் மஞ்சள் ஒட்டும் வலை அமைக்கும் முறையை விளக்கமாக கூறினர். சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ, திரிப்ஸ், ஜாசிட் மற்றும் ஆபிட் போன்றவற்றை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து கட்டுப்படுத்தும் விதம் பற்றி விவரிக்கப்பட்டது.

பயிரின் உயரத்திற்கு ஏற்ப வலைகளை பொருத்துதல், ஒரு ஏக்கருக்கு தேவையான எண்ணிக்கை மற்றும் ஒட்டும் தாள்கள் நிரம்பியவுடன் அவற்றை மாற்றும் அவசியம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த செயல்முறை விளக்க நிகழ்ச்சி ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், குறைந்த செலவில் பாதுகாப்பான பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடிக்க விவசாயிகளை ஊக்குவித்தது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் : ஒரு விரிவான விளக்கம்

விவசாயத் துறையில் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence - AI) ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இது விவசாயிகளுக்கு முடிவெடுப்பதில் உதவி செய்வதுடன், வளங்களைச் சரியாகப் பயன்படுத்தவும், உற்பத்தியை அதிகரிக்கவும் வழிவகுக்கிறது.

**1. நோய் தாக்குதலை கண்டறிதல் (Disease Detection)**

விவசாயத்தில் AI–ன் மிக முக்கியமான பயன்பாடு பயிர்களில் ஏற்படும் நோய்களைக் கண்டறிவதாகும். இதற்காக கணினி பார்வை (Computer Vision) மற்றும் ஆழ்ந்த கற்றல் (Deep Learning) போன்ற தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**செயல்முறை :** விவசாயிகள் தங்கள் ஸ்மார்ட்போன் மூலம் பாதிக்கப்பட்ட பயிரின் புகைப்படத்தை எடுத்தால், AI அல்காரிதம்கள் அதை முந்தைய தரவுகளுடன் ஒப்பிட்டு நோயைக் கண்டறியும்.

**பயன்படும் கருவிகள்**

**Plantix :** இது ஒரு 'டிஜிட்டல் பயிர் மருத்துவர்' போல செயல்படுகிறது. இது பூச்சிகள், நோய்கள் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை நொடிகளில் கண்டறியும்.

**Agrio :** இது செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி ஒரு பெரிய நிலப்பரப்பில் நோய் பரவுவதைக் கண்காணிக்க உதவுகிறது.

**2. விளைச்சலை முன்கூட்டி கணிப்பு (Yield Prediction)**

விளைச்சலைக் கணிப்பதன் மூலம் விவசாயிகள் தங்கள் அறுவடைக்குப் பிந்தைய விற்பனை மற்றும் சேமிப்பைத் திட்டமிட முடியும்.

**தொழில்நுட்பம் :** செயற்கைக்கோள் படங்கள், மண்ணின் தரம், கடந்த கால விளைச்சல் தரவுகள் மற்றும் வானிலை முன்னறிவிப்புகளைப் பயன்படுத்தி இயந்திரக் கற்றல் (Machine Learning) மூலம் இது கணிக்கப்படுகிறது.

**பயன்கள் :** உரங்களின் பயன்பாட்டைத் திட்டமிடவும், சந்தை விலைக்கு ஏற்ப அறுவடையைத் தீர்மானிக்கவும் உதவுகிறது.

**நிறுவனங்கள் :** Cropin மற்றும் Farmonaut போன்ற நிறுவனங்கள் இந்தியாவில் இந்தத் சேவையை வழங்கி வருகின்றன.

3. பருவ மற்றும் வானிலை மாற்றம் (Weather & Climate Analysis) தவறான வானிலை கணிப்பால் ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்க்க AI உதவுகிறது.

**முன்னறிவிப்பு :** AI மாதிரிகள் உலகளாவிய வானிலை தரவுகளை ஆய்வு செய்து, குறிப்பிட்ட விவசாய நிலத்திற்குத் தேவையான துல்லியமான வானிலை (Hyper-local weather) தகவல்களை வழங்குகின்றன.

**பருவ மாற்றங்கள் :** நீண்ட கால பருவநிலை மாற்றங்களை (Climate Change) ஆய்வு செய்து, எந்தப் பருவத்தில் எந்தப் பயிர் பயிரிடலாம் என்ற ஆலோசனையை வழங்குகிறது.

**கருவிகள் :** ClimateAi மற்றும் IBM Watson Decision Platform for Agriculture ஆகியவை இதில் முன்னணியில் உள்ளன.

**4. நீர் மற்றும் உர நிர்வாகம் (Water & Fertilizer Management)**

வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த துல்லிய விவசாயம் (Precision Agriculture) முறை பின்பற்றப்படுகிறது.

**நீர் மேலாண்மை :** மண்ணில் பொருத்தப்பட்டுள்ள IoT சென்சார்கள் மண்ணின் ஈரப்பதத்தை அளவிடும். AI இந்தத் தரவை ஆய்வு செய்து, எப்போது, எவ்வளவு தண்ணீர் தேவை என்பதைத் தானியங்கி பாசன முறை (Smart Irrigation) மூலம் கட்டுப்படுத்தும்.

**உர நிர்வாகம் :** பயிரின் ஆரோக்கியத்தைப் பொறுத்து, எந்தப் பகுதிக்கு எவ்வளவு உரம் தேவை என்பதை AI கண்டறியும்.

**கருவிகள் :** See & Spray (John Deere) தொழில்நுட்பம் களைகளை மட்டும் கண்டறிந்து அவற்றின் மீது மட்டும் பூச்சிக் கொல்லியைத் தெளிக்க உதவுகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த Farm Again நிறுவனம் துல்லிய பாசனத்தில் AI –ஐப் பயன் படுத்துகிறது.

## முக்கிய AI கருவிகள் மற்றும் அவற்றின் பயன்கள் (அட்டவணை)

| AI கருவி/செயலி | முக்கிய பயன்பாடு | சிறப்பு அம்சம் |
|---|---|---|
| Plantix | நோய் கண்டறிதல் | புகைப்படத்தின் மூலம் உடனடி தீர்வு |
| Cropin | விளைச்சல் கணிப்பு | செயற்கைக்கோள் தரவு பகுப்பாய்வு |
| ClimateAi | வானிலை முன்னறிவிப்பு | பருவநிலை இடர் மேலாண்மை |
| Blue River (See & Spray) | களை மேலாண்மை | களைகளை மட்டும் குறி வைத்து மருந்தடித்தல் |
| Kisan e-Mitra | விவசாய உதவி | அரசு திட்டங்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் AI சாட்பாட் |
| Farmonaut | பயிர் கண்காணிப்பு | நிலத்தின் ஆரோக்கியத்தை செயற்கைக்கோள் மூலம் அறிதல் |

முடிவுரை : விவசாயத்தில் AI தொழில்நுட்பம் என்பது வெறும் ஆடம்பரமல்ல, அது எதிர்காலத் தேவையாக மாறி வருகிறது. குறைந்த நீர், குறைந்த உரம் மற்றும் குறைந்த செலவில் அதிக விளைச்சலைப் பெற இது பெரிதும் உதவுகிறது. இந்திய அரசாங்கமும் Bharat-VISTAAR போன்ற திட்டங்கள் மூலம் AI–ஐ விவசாயிகளிடம் கொண்டு செல்ல முயற்சி செய்து வருகிறது.

தகவல் : **கோ.சுரேஷ்குமார், மைக்ரோ கிரீன் வளர்ப்பு செயல்பாட்டாளர், இயற்கை விவசாய ஆர்வலர், கோவில்பட்டி.**



# தென்னையில் ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண்மை கல்லூரி மாணவி

தேனி, பிப்.21

தேனி மாவட்டம், போடி அருகிலுள்ள உப்புக் கோட்டையில் தென்னை விவசாயிகளுக்காக ஊட்டச்சத்து மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.




இந்த நிகழ்ச்சியை இசை பாரதி, வேளாண்மை கல்லூரி மாணவி முன்னெடுத்து, தென்னை மரங்களில் சமநிலையான உரமிடல் மற்றும் சத்து மேலாண்மை பற்றிய விரிவான விளக்கத்தை வழங்கினார்.

நிகழ்ச்சியில், தென்னை மர வளர்ச்சிக்கும் அதிக விளைச்சலுக்கும் முக்கியமான நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) ஆகிய முதன்மை சத்துக்கள் தேவையென அவர் கூறினார். குறிப்பாக, ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரு முறை பரிந்துரைக்கப்பட்ட அளவில் உரம் வழங்க வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், மைக்ரோ நியூட்ரியன்ட்களான சிங்க், போரான், மக்னீசியம் போன்ற சத்துக்கள் குறைந்தால் இலை மஞ்சள் நிறமாதல், காய் உதிர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என்றும் விளக்கினார்.

அவர் Indian Council of Agricultural Research (ICAR) பரிந்துரைக்கும் சத்து மேலாண்மை முறைகள் குறித்து எடுத்துரைத்தார். நிலத்தடி நீர் நிலை, மண் தன்மை மற்றும் மரத்தின் வயது போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு உர அளவை தீர்மானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், இயற்கை உரங்களான பசளி உரம், கம்போஸ்ட், பசுந்தழை உரம் போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலம் மண் வளம் அதிகரிக்கலாம் என்றார். டிரிப் முறையில் உரம் வழங்கும் ‘ஃபெர்டிகேன்’ முறையும் சத்துக்கள் சரியாகச் சேர உதவும் என்று தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பல கேள்விகளை எழுப்பி, தங்கள் வயல்வெளி அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். மாணவியின் விளக்கங்கள் அவர்களுக்கு பயனுள்ளதாக இருந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, தென்னை விவசாயத்தில் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறுவதற்கான ஒரு முக்கியமான படியாக அமைந்தது.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வாழை & கறிவேப்பிலையிலிருந்து மதிப்பூட்டப் பட்ட உணவுப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், பிப்.21

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வாழை மற்றும் கறிவேப்பிலையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 24.02.26 மற்றும் 25.02.26 ஆகிய நாட்களில் நடைபெறும். கீழ்க்காணும் உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- வாழைப் பொடி
- வாழைப் பழ ஜாம்
- வாழைப் பூ ஊறுகாய்
- வாழைத் தண்டு மிட்டாய்
- வாழை சத்து மாவு
- வாழை ஐஸ்கிரீம் மிக்ஸ்
- கறிவேப்பிலை பொடி
- கறிவேப்பிலை பேஸ்ட்
- கறிவேப்பிலை சாத பொடி

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500/- GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

பயிற்சியானது காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறி யியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண். 7, மருதமலை சாலை), கோயம்புத்தூரில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயபுத்தூர் - 641 003, அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422-6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# அமிர்த கரைசல் செயல்முறை விளக்கத்தினை செய்து காட்டிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, பிப்.21

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் உள்ள சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை சேர்ந்த நான்காம் ஆண்டு மாணவர்களாகிய ஆ.கபிலன், ப.மாதவன், அ.விஸ்வா, அ.முகில் கார்த்தி, ரா.மணிகண்ட பிரபு, மா.ராகுல் பாண்டியன் ஆகியோர் கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவ திட்டத்தை (RAWE) மேற்கொண்டு அதன் மூலம் இயற்கை முறையில் பயன்படுத்தக்கூடிய அமிர்த கரைசல் செயல்முறை விளக்கத்தினை காளையார் கோவில் கிராம விவசாயிகளுக்கு விளக்கினர்.

அமிர்த கரைசல் என்பது இயற்கை வேளாண்மையில் பரவலாக பயன்படுத்தப்படும் ஒரு திரவ உயிர் உரமாகும். அமிர்த கரைசல் மாட்டுச் சாணம், கோமியம், வெல்லம் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு சிறந்த இயற்கை நிலவள ஊக்கி ஆகும். இது மண்ணின் உயிர்ச்சத்தைக் கூட்டி, பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுகிறது. ரசாயன உரங்களுக்கு மாற்றாக குறைந்த செலவில் தயாரிக்கக்கூடிய ஒரு பயனுள்ள இயற்கை உரமாக இது கருதப்படுகிறது.

மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையை பல மடங்காக பெருக்குகிறது. மண்ணில் உள்ள சத்துக்களை பயிர்கள் எளிதில் உறிஞ்ச உதவுகிறது. வேர் மண்டலத்தை பலப்படுத்தி, வேர் அழுகல் போன்ற நோய்களைத் தடுக்கிறது. பயிர்கள் மீது தெளிக்கும் போது சில வகை பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது என்பதை இயற்கை வழி வேளாண்மை முறைகளை விவசாயிகளுக்கு விளக்கி கூறினர்.

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இடைக்கால வேளாண் பட்ஜெட் 2026யின் முக்கிய அம்சங்கள்

தமிழக அரசின் 2026-27 ஆண்டு இடைக்கால பட்ஜெட் பிப்ரவரி 17யில் தமிழக சட்டமன்றத்தில் வேளாண் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தாக்கல் செய்தார். அதில் உள்ள முக்கிய அம்சங்கள் என்னென்ன?.



### 1) நெல் சாகுபடி

நெல் சாகுபடி பரப்பை அதிகரிக்க குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டம் 5482 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு, 19.5 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். நெல் ஜெயராமன் மரபு சார் நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தின் 900 மெ.டன் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப் பட்டு 70,000 விவசாயிகளுக்கு வினியோகிக்கப்பட்டுள்ளன.

### 2) தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்

2023-24 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 12.84 லட்சம் விவசாயிகள், 178 கோடி நிதியில் பயன் அடைந்து, 20 லட்சம் ஏக்கரில் சிறுதானியம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கம்பு சாகுபடி பரப்பு 113 லட்சம் ஏக்கரிலிருந்து, 133 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளன.

### 3) பயிர் சாகுபடி யில் முதலிடம்

தேசிய அளவில் கேழ்வரகு (ராகி) உற்பத்தி திறனில் முதல் இடம், உற்பத்தில் இரண்டாம் இடம் ராகி பெற்றுள்ளது. அது மட்டுமல்ல குறு தானியங்கள் உற்பத்தியில் 5வது இடமாக உள்ளது.

### 4) தென்னை விவசாயம்

தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 லட்சம் தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 21 லட்சம் பழச்செடிகள் வழங்கப்பட்டுள்ளது.

### 5) வேளாண் பொறியியல் துறை

வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் மொத்தம் 77,499 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்க பட்டுள்ளதாகவும் 1320 வேளாண் இயந்திர வாடகை மையம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன. இதற்கான மானியமாக 783 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**சூரிய சக்தி பம்பு செட்கள்?**

4150 சூரிய சக்தி பம்பு செட்டுகள் நிறுவப்பட்டு 83 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 5954 புதிய மின்சார பம்பு செட்டுகள் 7.67 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

**பனங்கொட்டை வினியோகம்?**

கடந்த 5 ஆண்டுகளில் தோட்டக்கலைத்துறை மூலமாக 68 லட்சம் பனங்கொட்டைகள், 1,28,000 பனங்கன்று வினியோகம் செய்யப்பட்டுள்ளன. 354 பனை மதிப்பு கூடங்கள் நிறுவப்பட்டு உள்ளன.

**நெல் கொள்முதல் விலை & ஊக்கத்தொகை**

சன்னரக நெல்லுக்கு 156 ரூபாயும் சாதாரண ரக நெல்லுக்கு 131 ரூபாயும் ஊக்க தொகையாக வழங்கப்பட்டு கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 2545, 2500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் 186 லட்சம் மெ.டன் நெல் கொள்முதல் செய்ய பட்டு, 2,118 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பயிர் காப்பீடு**

கடந்த 5 ஆண்டுகளில் 184 லட்சம் எக்கர் பரப்பை சுமார் 80 லட்சம் விவசாயிகள் காப்பீடு செய்யப்பட்டது. மகசூல் இழப்பிற்கு 38 லட்சம் விவசாயிகளுக்கு இழப்பீடாக 6063 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**பயிர் இரகங்கள் :** கடந்த 5 ஆண்டுகளில் 101 புதிய இரகங்கள், 21 வேளாண் தொழில் நுட்பங்கள் 16 பண்ணை கருவிகள் TNAU கோவை வெளியிட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு விபரங்கள் :** 2021-22யில் 34,220 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 25-26யில் 45,601 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளன. 26-27 ஆண்டில் இடைக்கால வரவு செலவு திட்டத்தில் 47,248 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மஞ்சள் ஒட்டும் பொறி பற்றிய விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.21

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், யா. ஒத்தக்கடை மதுரையை சேர்ந்த இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவி ப.ஸ்ருதிகா, செமனிப்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு தேங்காய் பயிரில் அதிகளவில் தாக்கம் ஏற்படுத்தும் வெள்ளை ஈ, அசுவினி, மாவுப் பூச்சி போன்ற சப்பும் பூச்சிகளை சுற்றுச்சூழல் நட்பு முறையில் கட்டுப்படுத்த மஞ்சள் ஒட்டும் பொறி பற்றிய பயிற்சி நிகழ்ச்சி நடத்தினார்.

இந்த பயிற்சி நிகழ்ச்சி, விவசாயிகளின் விழிப்புணர்வை அதிகரித்து, இரசாயன பூச்சிக்கொல்லி பயன்பாட்டை குறைக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு, தென்னையில் பூச்சிகளால் ஏற்படும் சேதம், அவற்றின் வாழ்க்கைச் சுழற்சி பற்றி விரிவாகக் கூறப்பட்டது.

ஒரு ஏக்கருக்கு 10-12 மஞ்சள் ஒட்டும் பொறிகள் அமைக்க வேண்டும். பொறிகளை தரையிலிருந்து 5-6 அடி உயரத்தில் கட்ட வேண்டும்.

ஒவ்வொரு 15-20 நாட்களுக்கும் ஒட்டும் தன்மை குறைந்தால் புதிய பொறிகளை மாற்ற வேண்டும் அல்லது அதன் மேல் ஆமணக்கு எண்ணெய் தடவ வேண்டும் மற்றும் பூச்சி தாக்கம் அதிகமாக இருக்கும் காலங்களில் கூடுதல் பொறிகளை அமைக்கலாம் என்பது போன்ற நடைமுறை விளக்கங்கள் செய்முறை காட்சி மூலம் எடுத்துரைக்கப்பட்டன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் இரசாயன பூச்சிக் கொல்லி செலவு குறைகிறது, தேங்காய் மகசூல் மற்றும் தரம் மேம்படுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது, பயனுள்ள பூச்சிகள் பாதிக்கப்படாமல் காக்கப்படுகின்றன என்று விவசாயி களுக்கு விளக்கப்பட்டது.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், மஞ்சள் ஒட்டும் பொறி ஒரு குறைந்த செலவு, எளிதான மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பம் என தெரிவித்தனர்.



# தென்னையில் சிவப்பு கூன் வண்டு மேலாண்மை



தென்னை மரங்களில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் முக்கிய பூச்சிகளில் சிவப்பு கூன் வண்டு (Red Palm Weevil) முதன்மையான தாகும். இது தென்னை, பனை, ஈச்சம் போன்ற பனை வகை மரங் களை தாக்குகிறது. இந்த வண்டின் தாக்குதல் ஆரம்ப நிலையில் கண்டறியப்படாவிட்டால், தென்னை மரம் முழுவதுமாக அழியும் அபாயம் உள்ளது.

## பூச்சியின் அடையாளம்

வண்டு சிவப்பு அல்லது சிவப்பு-பழுப்பு நிறத்தில் காணப்படும். நீளம் சுமார் 3 முதல் 4 செ.மீ. நீண்ட மூக்குப் போன்ற அமைப்பு (கூன்) காணப்படும். புழுக்கள் கால்கள் இல்லாமல் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

## தாக்கும் விதம்

பெண் வண்டு தென்னை மரத்தின் தண்டு, இலை அடிப்பகுதி அல்லது காயமடைந்த இடங்களில் முட்டைகளை இடுகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் புழுக்கள் மரத்தின் உள் பகுதிக்குள் துளையிட்டு உணவாக உண்ணுகின்றன. இதனால் மரத்தின் உள் பகுதி அழிந்து, மரம் பலவீனமாகிறது.

## தாக்குதலின் அறிகுறிகள்

தென்னை தண்டிலிருந்து பழுப்பு நிற பிசுபிசுப்பான திரவம் வெளியேறுதல். தாக்கப்பட்ட இடங்களில் துர்நாற்றம். இலைகள் மஞ்சளாகி வாடுதல். மேல் பகுதி (Crown) சாய்ந்து காணப் படுதல். கடைசியில் மரம் முறிந்து விழுதல்.

## சேதத்தின் விளைவுகள்

தென்னை மகசூல் குறைதல். மரத்தின் வளர்ச்சி தடைபடுதல். தோட்டத்தில் உள்ள பிற மரங்களுக்கும் பூச்சி பரவல்.

**கட்டுப்பாட்டு முறைகள்**

**இயந்திர மற்றும் இயற்கை முறைகள்**

கடுமையாக தாக்கப்பட்ட மரங்களை அகற்றி அழித்தல், புழுக்கள் உள்ள துளைகளில் மணல் + மண்ணெண்ணெய் கலவை ஊற்றுதல், புளித்த தேங்காய் நீர் / கரும்புச் சாறு கொண்டு வண்டு வலை அமைத்தல்.

**உயிரியல் கட்டுப்பாடு**

Beauveria bassiana பூஞ்சை மருந்து பயன்படுத்தலாம்

பெரோமோன் வலைகள் - ஏக்கருக்கு 5 முதல் 10 உயிரியல் கட்டுப்பாடு என்பது இரசாயன மருந்துகளை குறைத்து, இயற்கையில் உள்ள நன்மை தரும் உயிரிகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறையாகும். இது சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பானதும், நீண்டகால பயன் தருவதும் ஆகும்.

**1. Beauveria bassiana (பூஞ்சை மருந்து)**

இது ஒரு பூஞ்சை வகை

சிவப்பு கூன் வண்டின் புழு மற்றும் பெரிய வண்டுகளை தாக்கி கொல்லும்

வண்டின் உடலில் ஒட்டிய பிறகு, அதன் உடலுக்குள் சென்று வளர்ந்து வண்டை அழிக்கும்

**பயன்பாடு**

Beauveria bassiana - 5 கிராம் / லிட்டர் நீர்

மரத்தின் துளைகள் மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களில் ஊற்ற வேண்டும்

மாலை நேரத்தில் பயன்படுத்துவது சிறந்தது

**நன்மைகள்**

மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் பாதுகாப்பானது

மண்ணின் நன்மை உயிரிகளை பாதிக்காது

**2. Metarhizium anisopliae**

மற்றொரு பயனுள்ள பூஞ்சை உயிரி

சிவப்பு கூன் வண்டின் அனைத்து வளர்ச்சி நிலைகளையும் தாக்கும்

**பயன்பாடு**

5 – 10 கிராம் / லிட்டர் நீர்

துளைகளில் ஊற்றி மண் கொண்டு மூட வேண்டும்

**3. பெரோமோன் வலை (Pheromone Trap) – உயிரியல் அடிப்படையிலான கட்டுப்பாடு**

பெண் வண்டின் வாசனைப் பொருளை பயன்படுத்தி ஆண், பெண் வண்டுகளை கவர்ந்து பிடிக்கும்

ரசாயனமில்லாத பாதுகாப்பான முறை

**அமைக்கும் முறை**

ஏக்கருக்கு 5– 10 வலைகள்

வலையில் புளித்த கரும்புச் சாறு / பனைநீர் சேர்க்கலாம்

7–10 நாட்களுக்கு ஒருமுறை வலையை சுத்தம் செய்ய வேண்டும்.

**நன்மை**


பூச்சி எதிர்ப்பு சக்தி உருவாகாது

மண்ணில் நீண்ட காலம் செயல்படும்.

**தடுப்பு நடவடிக்கைகள்**

தென்னை மரங்களில் காயங்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுதல், வெட்டப்பட்ட பகுதிகளை உடனடியாக மண் அல்லது பூச்சி மருந்து கொண்டு மூடுதல், தோட்டத்தை சுத்தமாக வைத்தல், காலந்தோறும் தென்னை மரங்களை பரிசோதித்தல்.

மேலும் விபரங்களுக்கு தி.ஜீவிதா, இளங்கலை வேளாண் மாணவி, முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர், முனைவர் இர.மகாலட்சுமி, ம.பானுப்பிரியா, குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : balu-guna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு இடுபொருள் விநியோகம் : புதிய திட்டம் தொடக்க விழா



சேலம், பிப்.21 வேளாண்மை – உழவர் நலத்துறை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் இணைந்து விவசாயிகளுக்கு சான்று பெற்ற விதைகள்மற்றும் இடுபொருட்களை வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைத்தார். இத்திட்ட துவக்க விழா காணொளி காட்சி மூலம் தலைவாசல் வட்டார தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ஒளிபரப்பப்பட்டது. இந்நிகழ்வில் தலைவாசல் வட்டார முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். தலைவாசல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற இந்த விழா–விற்கு, வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை தாங்கினார்.

விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள், அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயே, அந்தந்தப் பருவ காலங்களில் எளிதாகக் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகள் இனி இடு

பொருட்களுக்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டிய அவசியம் இருக்காது என கூறினார். சிறப்பு விருந்தினராக சி.எஸ்.ஆர். வில்லவன் கலந்து கொண்டு திட்டத்தைத் தொடங்கி வைத்து விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் ஜானகி மற்றும் துணை வேளாண்மை அலுவலர் மணவழகன் ஆகியோர் இத்திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் அதன் மூலம் விவசாயிகள் பெறக்கூடிய பயன்கள் குறித்து விளக்க உரையாற்றினர்.

நிகழ்ச்சிக்கான விரிவான ஏற்பாடுகளைத் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கச் செயலாளர் மணிமேகலை செய்திருந்தார். இவ்விழாவில் உதவி வேளாண்மை அலுவலர்கள் ரவிக்குமார், பெரியசாமி, ஆத்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரமேஷ் மற்றும் முத்துவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தங்கள் பகுதி கூட்டுறவு சங்கங்கள் மூலமே அரசு வழங்கும் தரமான இடுபொருட்களைப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டிருப்பதற்கு அப்பகுதி விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியையும், வரவேற்பையும் தெரிவித்துள்ளனர்.

## தென்னையை தாக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி!

தேனி, பிப்.21

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட உ.அம்மாப்பட்டி ஊராட்சியில் இருக்கும் அம்பாசமுத்திரம் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி கே.பத்மாவதி, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தென்னை மரங்கள் வளர்க்கும் விவசாயிகளுக்காக, தென்னையை தாக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் முறையை பயிற்சி விளக்கமாக எடுத்துரைத்தார். தென்னையில் போரான் ஊட்டச்சத்து குறைபாட்டால், பிளவுபடாத இலைகள், தேங்காய் ஓடு மற்றும் உமி வெடித்தல், விளைச்சல் குறைதல் போன்ற பிரச்சனைகள் வருகின்றன. இவற்றை தவிர்க்க, தென்னைக்கு எருக்க இலை உரத்தை பயன்படுத்த வேண்டும்.

**தயாரிக்கும் முறை :** முதலில், களை நிலங்களில் இருந்து புதிய எருக்கு இலைகளை (அ) முழு தாவரங்களை சேகரித்து, சிறு துண்டுகளாக நறுக்கவும். தென்னையின் அடிப்பகுதியை சுற்றி தோண்டவும் (உள் 1-2 அடி ஆழம், தண்டிலிருந்து 2-3 அடி). ஒரு முதிர்ந்த மரத்திற்கு 5-10 கிலோ நறுக்கிய இலைகளை வைத்து மண்ணால் மூடவும். மழைக்காலம் (அ) முன் மழைக்காலத்தில் பயன்படுத்தவும் அல்லது மட்குவதற்கு நன்கு நீர் பாய்ச்சவும். 2-3 ஆண்டுகள் வருடந்தோறும் செய்து வந்தால் தென்னை மரங்களில் போரான் ஊட்டச்சத்து அதிகரித்து விளைச்சல் அதிகரிக்கும். இந்த முறையை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, நேரடியாக தென்னந்தோப்பில் செய்தும் காட்டினார்.

# தென்னை மரங்களை தாக்கும் காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



நாமக்கல், பிப்.21

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் அருகே உள்ள துத்திக்குளம் கிராமத்தில் நாமக்கல் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவி ஆர்த்தி பாண்டி ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் அங்குள்ள விவசாயிகளுக்கு தென்னை மரங்களை தாக்கும் காண்டாமிருக வண்டுகளை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கம் அளித்தார்.

தென்னை மரங்களில் குருத்துகளை சேதப்படுத்தி வளர்ச்சியையும் விளைச்சலையும் பாதிக்கும் காண்டாமிருக வண்டுகளை கட்டுப்படுத்த வாளி வலை முறை ஒரு சிறந்த மற்றும் சுற்றுச்சூழல் நட்பு நிலையாகும் என்பதை மாணவி விளக்கினார்.

**பயன்படுத்தும் முறை :** முதலில் 10-15 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பிளாஸ்டிக் வாலியை எடுத்துக்கொண்டு அதன் மூடியின் கீழ்ப்பகுதியில் மூன்று முதல் நான்கு செவ்வக வடிவ துளைகள் இடப்பட வேண்டும். வண்டுகள் எளிதாக வாளிக்குள் செல்ல அதன் வெளிப்புறத்தில் சனல் சாக்கு அல்லது நாரியினைச் சுற்றி கட்ட வேண்டும், இது வண்டுகள் வழுக்காமல் ஏற உதவும், பின்னர் 'ரைனோலூர்' எனப்படும் இனக்கவர்ச்சி மாத்திரையை மெல்லிய கம்பி மூலம் வாலியின் மூடியின் உட்புறம் தொங்க விட வேண்டும், அந்த மாத்திரை தண்ணீரில் படாதவாறு கவனிக்க வேண்டும்

வாளியின் கால் பகுதி வரை தண்ணீர் நிரப்பி அதில் சிறிதளவு சோப்புத்தூள் அல்லது பூச்சிக்கொல்லி மருந்து சேர்த்து கலக்க வேண்டும். இதனால் உள்ளே விழும் வண்டுகள் மூச்சு திணறி அழிகின்றன. இந்த பொறியை தென்னை மரத்தில் நேரடியாக கட்டாமல் 1.2 முதல் 1.8 மீட்டர் உயரமுள்ள கம்பில் கட்டி தோப்பில் ஆங்காங்கே அமைக்க வேண்டும் என்று மாணவிகள் செய்முறை விளக்கம் அளித்தனர்.

# மொபைல் மண் பரிசோதனை ஆய்வு கூடத்தினை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.21

நாமக்கல் மாவட்டத்தில் இயங்கி வரும் மொபைல் மண் பரிசோதனை ஆய்வு கூடத்தை, பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் சமீபத்தில் பார்வையிட்டனர். இந்த பார்வையின் மூலம் விவசாய நிலங்களில் இருந்து சேகரிக்கப்படும் மண் மாதிரிகள் எவ்வாறு பரிசோதிக்கப் படுகின்றன என்பது குறித்து மாணவிகளுக்கு நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது.

மண்ணின் pH, மின்கடத்துத்திறன் (EC), நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் உள்ளிட்ட முக்கிய ஊட்டச்சத்துக்கள் பரிசோதனை செய்யும் முறைகள் குறித்து ஆய்வுகூட அலுவலர்கள் மாணவிர்களுக்கு விளக்கமளித்தனர். மேலும், மண் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் விவசாயி களுக்கு உர மேலாண்மை மற்றும் சரியான பயிர் தேர்வு குறித்து ஆலோசனைகள் வழங்கப்படும் விதம் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இந்த மொபைல் மண் பரிசோதனை வாகனம் மூலம் கிராமப்புற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நேரடியாக சேவை வழங்கப்படுவதால், மண் வள மேலாண்மை மேம்பட்டு, செலவினம் குறைந்து, விளைச்சல் அதிகரிக்க உதவுகிறது என மாணவிகள் தெரிவித்தனர்.

இந்த பார்வை நிகழ்வு மூலம் மண் பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் நிலைத்த வேளாண்மையில் அதன் பங்கு குறித்து மாணவிகள் தெளிவாக அறிந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சிப்பி காளான் வளர்ப்பு தொடர்பான பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

சிவகங்கை, பிப்.21

சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டத்தில் அமைந்துள்ள அரண்மனை சிறுவயல் கிராமத்தில், செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் ஊரக வேளாண் அனுபவப் பயிற்சியின் (RAWE) ஒரு பகுதியாக சிப்பி காளான் வளர்ப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினர்.





இந்நிகழ்ச்சியில், சிப்பி காளான் வளர்ப்பிற்கான குடிசை அமைக்கும் முறை, தேவையான சூழல் மற்றும் பராமரிப்பு நடைமுறைகள், காளான் பைகள் நிரப்புதல் மற்றும் விதை இடும் முறைகள், மேலும் சரியான காலத்தில் அறுவடை செய்வது குறித்து விவசாயிகளுக்கு விரிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன. குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய துணைத் தொழிலாக காளான் வளர்ப்பின் முக்கியத்துவமும் இப்பயிற்சியின் மூலம் எடுத்துரைக்கப்பட்டது.

# வெண்டைக்காய் பயிரில் Spodoptera கட்டுப்பாட்டிற்கான விசப் பொறி செயல்விளக்கம்



மதுரை, பிப்.21

மதுரை மாவட்டம், பாப்பாப்பட்டி கிராமத்தில் நடைபெற்று வரும் RAWE பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, வெண்டைக்காய் பயிரில் தாக்கம் ஏற்படுத்தும் Spodoptera பூச்சியை கட்டுப்படுத்தும் நோக்கில் விசப் பொறி செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

மதுரை வேளாண் கல்லூரி 4ஆம் ஆண்டு மாணவி கு.ம. ஹரிணி, விவசாயின் வயலில் நேரடியாக விசப் பொறி தயாரிக்கும் முறை மற்றும் அதை மாலை நேரத்தில் பயன்படுத்தும் முறைகள் குறித்து விளக்கினார். ஆரம்ப நிலையிலேயே புழுக்களை கட்டுப் படுத்துவதன் மூலம் இலை சேதத்தை குறைத்து விளைச்சலை பாதுகாக்க முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறையின் ஒரு பகுதியாக இத்தொழில்நுட்பம் குறைந்த செலவில் பயனளிக்கும் நடைமுறையாகும் என்றும் தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வு பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741